குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, இயக்குநரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:திரு.ஜானி டாம் வர்கீஸ்,இ.ஆ.ப.,

எண். **DSD/739/2025-A1**I/269074/2025 நாள்.09-04-2025

பொருள்:- பணியாளர் தொகுதி -சிவகங்கை, அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம் - திருமதி.ச.ரஞ்சனி உதவியாளர் என்பவருக்கு 23.05.2024 முற்பகல் முதல் உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து - ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:-
1. சென்னை-10, சமூகப்பாதுகாப்புதுறை இயக்குநர் செ.மு.எண்.I/40438/2023. ,நாள்.11.11.2023.
2. சென்னை-10, சமூகப்பாதுகாப்புதுறை இயக்குநர் செ. மு. எண். I/63110/2024, நாள்.08.01.2024.
3. சிவகங்கை, அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர் செ.மு.எண்.09/அ1/2024, நாள்.23.05.2024

******

ஆணை:

பார்வை 1 இல் குறிப்பிட்டுள்ள இயக்குநரின் செயல்முறைகளின்படி இத்துறையின் கீழ் உள்ள உதவியாளர் பதவிக்கு 15.03.2023 அன்றுள்ளபடி இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்தில் பணிபுரியும் பணியாயர்களில் தகுதி வாய்ந்த நபர்களின் ஏற்பளிக்கப்பட்ட திருத்திய தேர்ந்த பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது.

பார்வை 2 இல் குறிப்பிட்டுள்ள இயக்குநரின் செயல்முறைகளின்படி திருமதி.ச.ரஞ்சனி என்பவருக்கு உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டதனை தொடர்ந்து, பார்வை (3) இல் காணும் கண்காணிப்பார் செயல்முறைகளின்படி, 23.05.2024 முற்பகல் முதல் சிவகங்கை, அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

எனவே தனியருக்கு உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் திருமதி.ச.ரஞ்சனி என்பவருக்கு உதவியாளர் பதவியில் 23.05.2024 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் தனியருக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்குள் அரசு அலுவலருக்காள பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து பெற வேண்டும் என ஆணை வழங்கப்படுகிறது. அவ்வாறு தேர்ச்சி பெற்றால் மட்டுமே இரண்டாவது ஊதிய உயர்வு பெற தகுதியுடையவராவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர் அறிவுறுத்தப்படுகிறார்.

Signed by
Johny Tom Varghese
Date: 09.04.2025 11:58:03
இயக்குநர்

பெறுநர்:

1. திருமதி.ச.ரஞ்சனி, உதவியாளர், அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம்,சிவகங்கை. (உரிய வழிமுறையாக)
2. கண்காணிப்பாளர், அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம்,சிவகங்கை